# GST ROAD NEWS

## SELAIYUR

Weekly News Paper

Email:gstroadnews@gmail.com

www.gstroadnews.com

Madambakkam, Camp Road, Mahalakshmi nagar, Kamarajapuram, Rajakilpakkam, Sembakkam

Vol:14 Issue-24 20 Sep 2026 -26 Sep 2026 4 Pages - Free Circulation Ct: 99628 80902



ANUJ HOMES (BUILDING CONTRACTOR) CHROMEPET
Home Construction
INCLUDING OHT & SEPTIC TANK SUMP, ELEVATION WORK
ARCHITECTURAL DESIGN
ENGINEER SUPERVISION
BRANDED MATERIALS
81481 11101
94446 54776



SHREE Music Academy SINCE 1999
Music Shapes Brighter Futures
WE ARE HIRING! JOIN OUR TEAM!
FRONT OFFICE ADMINISTRATOR (FEMALE ONLY)
SKILLS REQUIRED:
Any College Degree/Diploma
College goers can also apply
MS Office Products
Social Media Handling
APPLY NOW!
70102 83028
Shree Music Academy, Kovilambakkam
Grow Learn Perform


## சென்னை விமான நிலையம் தனியார் மயமா?

சென்னை விமான நிலையத்தை தனியாரிடம் விடுவது குறித்து முதலமைச்சர் விஜய் மத்திய அரசுக்கு கடிதம் எழுதி இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனால் விமான நிலையத்தை அதானிக்கு விடுவதற்கு திட்டமா என்று எதிர் கட்சிகள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.


WANTED TELECALLER
for Aluminium Ladder Company
Job Role:
To handle online, Justdial, Indiamart calls
Generate enquiries and follow up with customers
Provide product information and assistance
Good Communication Skills Preferred
Grow with Us!
Work Location: Padappai / Hasthinapuram
Work from Home also Welcome
Female Candidates Preferred
Salary: ₹22,000 to ₹25,000 + INCENTIVE
Attractive Incentives Based on Performance
Contact: 9042043101



NEW FLAT FOR SALE @ CHROMPET
HASTHINAPURAM BUS STAND
3 BHK | 1086 Sq.Ft | FIRST FLOOR
NO LIFT | NO CAR PARKING | ONLY TWO WHEELER PARKING
PRICE 67L
CONTACT 93840 55668



KMR HOUSING
INVITES LAND OWNERS FOR JOINT VENTURE OR OUTRATE
PREMIUM FLATS FOR SALE
@ CHITLAPAKKAM
CLOSE TO NSN SCHOOL CAMP ROAD JUNCTION
FLAT STARTS FROM 80.4L LACS
2 BHK, 3 BHK
NO COST PRE-EMI Till Handover
HURRY UP LIMITED PERIOD OFFER
AMENITIES
Lift | CCTV | Carparking | Video Door Phone | Vastu Compliant | EV Charging | Inverter Backup
CALL NOW 99400 82615 / 98940 80487



DELUXE FLAT FOR SALE
SAINATH BUILDERS
SELAIYUR
BALAJI NAGAR MAIN ROAD
DOUBLE & TRIPLE BEDROOM FLATS
(1200 Sqft - 1250 Sqft)
Opp. Bharath University, Via Murugan Super market, Indira Nagar Zion Matric Hr. Sec. School, Palani kalyana Mandapam, SDB Kalyana Mandapam.
COVERED CAR PARKING | LIFT TILL TERRACE DESIGN | FULLY TEAKWOOD | SAFE & PEACEFUL LOCATION
FOR BOOKING CONTACT 94448 39999 / 90032 82197



FLAT FOR SALE
@ Thirumalai Nagar Extension, Hasthinapuram.
2 BHK - 980 Sq.Ft
2 BHK - 1020 Sq.Ft
LIFT | CCTV | CCP | 100% VAASTHU
SAKTHI BALAN BUILDER
No. 3, RP Road, Hasthinapuram, Chennai - 600 064.
9790878747



LEARN PRESERVE PERFORM BELONG
RBN Kalai Koodam
ARTS | CULTURE | COMMUNITY
Tradition Builds Brighter Futures
NURTURING TALENT. ENRICHING LIVES.
ARTS CLASSES
TRADITIONAL ARTS FOR A BRIGHTER TOMORROW
Bharatanatyam - DISCIPLINE. EXPRESSION. TRADITION.
Carnatic Music - VOICE. VALUES. VIBRATION.
Art & Craft - CREATIVITY. CONFIDENCE. JOY.
Cultural Programs & Workshops - LEARN. PERFORM. GROW.
TUITION CENTRE
QUALITY EDUCATION FOR A BRIGHTER TOMORROW
TUITION FOR ALL CLASSES (KG TO 12)
ALL SUBJECTS
CBSE | STATE BOARD | MATRICULATION
EXPERIENCED FACULTY
INDIVIDUAL ATTENTION
REGULAR ASSESSMENTS
CONCEPT CLARITY
SUPPORTIVE LEARNING ENVIRONMENT
LEARN GROW SUCCEED
DISCIPLINE | CURIOSITY | CONFIDENCE | BRIGHTER TOMORROW
SMALL STEPS BIG FUTURES
CULTURE CONFIDENCE CREATIVITY COMMUNITY
Art Builds Kinder Humans
9087909667 / 96000 03813
FOLLOW US ON INSTAGRAM rbn.kalaikoodam
ADMISSIONS OPEN ARTS & TUITION
ALL AGE GROUPS WELCOME
Balaji DM Towers, 39, Radha Nagar Main Rd, near Canara Bank, Lakshmi Nagar, Chromepet, Tambaram, Tamil Nadu 600044
TOGETHER FOR A BRIGHTER TOMORROW



KOTHARI NAGAR
VILLA PLOTS FOR SALE
LOCATION: CHROMPET
YOUR IDEAL HOME DESTINATION
1151 SQ.FT TO 2381 SQ.FT
CONTACT: 8270022224 / 8270022228
RERA NO.: TNRERA/29/LO/2627/2026
https://rera.tn.gov.in



PREMIUM 3,5 BHK FLATS FOR SALE @ CHROMEPET
NEW LAUNCH
PADMANABHA NAGAR
Nr. KARUMARI AMMAN TEMPLE
NEW LAUNCHING 5 BHK FLAT IN CHROMEPET
AVAILABLE SPACE
PREMIUM LUXURY LIVING
98416 59929
98416 59930
3 BHK 1289 to 1405 Sqft
5 BHK 2250 Sqft
SPECIFICATION
With Lift | As Per Vaastu | CCP | CCTV | Videodoor Phone | EV Charger Point | Automatic Water Tank Leveler | Red Bricks Construction
24 HRS POWER BACKUP
Sankar Constructions
BUILDING TRUST. CREATING HOMES.
98416 59929
98416 59930
Project Approved by: LIC HFL LIC HOUSING FINANCE LTD | HDFC BANK | SBI

# வேண்டிய வரம் தரும் வழிபாடுகள் நிறைந்த புரட்டாசி மாதம்

சூரியனுக்கு மிக அருகாமையில் உலவும் புதனின் உச்சவீடாகிய கன்னி ராசியில் சூரியன் சஞ்சரிக்கும் காலத்தை புரட்டாசி மாதமென அழைக்கின்றோம்

புரட்டாசி மாதத்தில் பிறந்தவர்கள் எதையும் துரிதமாய்க் கற்றுணரக் கூடியவர்கள். சிறுவயதிலேயே அரிய பெரிய நூல்களைப் புரட்டிப் பார்த்து விடுவார்கள்.

இந்த மாதத்தில் வெயில் குறைந்து, மழை அவ்வப்போது தலைகாட்டி, இரவில் குளிரும், பகலில் உஷ்ணமும் இருக்கும். பயிர், பச்சைகளுக்கு நல்ல நீர் கிடைத்து, பூக்கத் துவங்கி வெய்யிலை ஜீரணித்துச் செழித்து வளரும் மாதம்.

புரட்டாசி மாதத்தை பெருமாள் மாதம் என்றும் அழைப்பார்கள். 108 திவ்ய தேசங்கள் உள்பட எல்லா பெருமாள் கோவில்களிலும் புரட்டாசி மாத வழிபாடுகள், உற்சவங்கள் மிக விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

திருப்பதி போன்ற பிரசித்தி பெற்ற பெருமாள் ஸ்தலங்களில் பிரம்மோற்சவ விழா கோலாகலமாக நடக்கும்.

குலதெய்வ பூஜைகள் செய்யவும், காணிக்கை, நேர்த்திக் கடன்கள் செலுத்தவும் இந்த மாதம் மிகவும் சிறந்தது.

இந்த மாதத்தை எமனின் கோரைப் பற்களுள் ஒன்றாக அக்னி புராணம் குறிப்பிடுகிறது. எமபயம் நீங்கவும், துன்பங்கள் விலகவும் புரட்டாசி மாதத்தில் காக்கும் கடவுளான விஷ்ணுவை வணங்கு வது சிறப்பு.



தேவி பராசக்தியைப் போற்றும் நவராத்திரி விழாவும் இம்மாதத்தில் தான் நடைபெறுகின்றது.

புரட்டாசி மாதம் முழுவதும் விரதமிருந்து , தூய காய்கறி தானிய உணவு வகைகளையே உண்டு, துளசி தீர்த்தம் பருகி, பெருமாள் புகழ்பாடும் நூல்களைப் படித்தும், பாராயணம் செய்தும் போற்ற வேண்டும். சிலர் புரட்டாசி வரும் எல்லா சனிக்கிழமைகளிலும், அல்லது ஏதேனும் ஒரு சனிக்கிழமையன்றும் படையல் படைத்துச் சிறப்பாக வழிபடுவதுண்டு.

பிதுர் லோகத்தில் வசிக்கும் மறைந்த நம் முன்னோர் இந்த மாதத்தில் தங்கள் உறவுகளை நாடி, இங்கே வருகின்றனர். புரட்டாசி வளர்பிறை பிரதமையில் இருந்து அமாவாசை வரையான, 15 நாட்கள் அவர்கள் பூமியில் தங்குவர்.

இதையே, "மகாளய பட்சம் என்பர்; "பட்சம் என்றால், "15 நாட்கள்' எனப் பொருள். இந்த நாட்களில் தினமும் தர்ப்பணம் செய்து, அவர்களின் தாகத்தைத் தீர்க்க வேண்டும். தகுதியானவர்களுக்கு அன்னதானம் செய்ய வேண்டும்.

இந்த பட்சத்தில் வரும் பரணி, "மகாபரணி' என்றும், அஷ்டமியை, "மத்யாஷ்டமி' என்றும், திரயோதசியை "கஜச்சாயை' என்று கூறப்படும்.

இந்த மூன்று நாட்களுமே, பிதுர் வழிபாட்டுக்கு உகந்தவை.

இம்மாதத்தில் வரும் மகாளய அமாவாசையில் செய்யப்படும் பிதுர் பூஜை மற்ற அமாவாசைகளைக் காட்டிலும் அதிக பலன் தரும்.

மஹாலய விதிப்படி அந்தப் பதினாறு நாள்களும் பித்ருக்களுக்காக அன்ன சிராத்தம் செய்ய வேண்டும், இயன்றவர்கள் பொன் முதலிய பொருள்களைத் தகுந்தவர்களுக்குத் தானமாக வழங்கலாம்.

எல்லா சனிக்கிழமைகளிலும் பெருமாளுக்கு விரதம் இருக்கலாம் அப்படி இருக்க முடியாதவர்கள் புரட்டாசி மாதம் முழுக்க விரதம் இருந்தால் அதே பலன் கிட்டும்.

புரட்டாசி சனிக்கிழமையில் தான் சனி பகவானும் அவதரித்தார் . எனவே ஜாதக அமைப்பின்படி சனி, புதன் திசை நடப்பவர்கள் எள் நல்லெண்ணெய் தீபம் போட்டு வழிபட சனியால் உண்டாகும் தடைகள் அனைத்தும் நீங்கும். பாவங்கள் நீங்கி புண்ணியமும் சுபயோக சுபங்களும் கூடி வரும்.

திருப்பதி வெங்கடாசலபதிப் பெருமாளை புரட்டாசி சனிக்கிழமைகளில் வணங்குவது பெரும் புண்ணியம். திருப்பதிக்கு சென்றும் வேங்கடவனை வணங்கலாம். இல்லையேல் வீட்டில் வேங்கடவன் திருவுருப் படத்தை வைத்தும் கும்பிடலாம்.

சிலர் வெங்கடேசப் பெருமாளின் முகத்தை மட்டும் வைத்து பூஜை செய்வதுண்டு. துளசி தளங்களால் பெருமாளை அர்ச்சிப்பது மிகவும் உகந்தது. மாவிளக்கிட்டு பூஜை செய்வதானால் பச்சரிசி மாவை தூய உடலோடும், மனதோடும் இருந்து சலித்து, மாவினாலே விளக்கு செய்து அதில் நெய் விட்டு தீபமேற்ற வேண்டும்.

பெருமாள் படத்தின் முன்னர், இப்படி நெய் தீபம் ஏற்றுவதால் வறுமை நீங்கி, வீட்டில் செல்வச் செழிப்பு ஏற்படும்.

# புரட்டாசி பௌர்ணமி விரதம்



ஐப்பசி பௌர்ணமி மட்டுமின்றி, சித்திரை முதற்கொண்டு பன்னிரு மாதங்களிலும் வரும் பௌர்ணமி திருநாளில் சிவனாரை வழிபடுவது மிகவும் சிறப்பு. அந்த வகையில் புரட்டாசி பௌர்ணமி தினத்தில் வீட்டில் விரதமி ருந்து சிவபெருமானை வழிபடுவதாலும், அருகிலுள்ள சிவாலயங்களுக்குச் சென்று வில்வார்ச்சனை செய்து, நெய் தீபங்கள் ஏற்றிவைத்து வழிபடுவதாலும் விசேஷ பலன்கள் கைகூடும். பிள்ளையார் பக்தரான கிருச்சமத முனிவரின் மகன் பலி.அவனும் பிள்ளையாரை வழிபட்டு பல வரங்களைப் பெற்றான். அந்த வரங்களில் குறிப்பிடத்தக்கவை பொன், வெள்ளி மற்றும் இரும்பாலான பறக்கும் கோட்டைகள். அவற்றைக்கொண்டு மூவுலகங்களையும் துன்புறுத்தினான், திரிபுரங்களுக்கும் அதிபதி யான அந்த அசுரனின் தொல்லைகளைப் பொறுக்க முடியாத தேவர்களும் முனிவர்களும் சிவபிரானைச் சரணடைந்தனர். அவர்களை ரட்சிக்கத் திருவுளம்கொண்ட பிள்ளையார் அசுரன்மீது போர்தொடுத்தார். போரின் முடிவில் கடும் சீற்றத்துடன் பாய்ந்தது சிவ கணை. திரிபுரனாகிய பலி, சிவனாரின் திருவடிகளில் ஒன்றிக் கலந்தான். அப்படி அவன் வீடுபேறடைந்த திருநாள், புரட்டாசி மாத பௌர்ணமி தினமாகும். அந்த நாளை பாகுளி என்று அழைப்பார்கள். இந்தப் புண்ணிய திருநாளில் சிவ வழிபாடு செய்பவர்களைத் துன்பங்கள் நெருங்காது. புரட்டாசி பௌர்ணமி தினத்தில் காலை வேளையில் சிவ வழிபாடு செய்ய, முற்பிறப்பில் செய்த பாவங்கள் நீங்கும். நண்பகலில் சிவ வழிபாடு செய்ய, முற்பிறப்பில் செய்த பாவங்கள் மட்டும் இல்லாமல், இந்தப் பிறவியில் செய்த பாவங்களும் நீங்கும். மாலை பிரதோஷ வேளையில் சிவ வழிபாடு செய்தால், சிவபெருமானின் அருளால் ஏழேழு பிறவிகளில் செய்து முற்றிய பாவங்கள் எல்லாமே நீங்குவதுடன், விரும்பிய எல்லா வேண்டுதல்களும் நிறைவேறும்.

# புரட்டாசி மாதத்தில் வரும் சனிக்கிழமை வழிபாட்டு பலன்கள் !!

புனிதமிக்க புரட்டாசி மாதத்தில் வரும் விரதங்கள் புண்ணிய பலன்களை அதிகம் தரும் என்பது ஐதீகம். ஜேஷ்டா விரதம், மகாலட்சுமி விரதம், தசாவதார விரதம், நவராத்திரி, லலிதா விரதம் ஆகிய விரதங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. புரட்டாசி சனிக்கிழமையில் விரதம் இருந்தால் குல தெய்வத்தின் அருள் பரிபூரணமாக கிடைக்கும். சித்தி விநாயகருக்கு புரட்டாசி மாதம் வளர்பிறை சதுர்த்தி திதியில் விரதம் இருந்து வழிபட்டால் எதிரிகள் தொல்லைகள் இருக்காது. புரட்டாசி சனிக்கிழமையில் தான் சனிபகவான் அவதரித்தார். அதன் காரணமாக, அவரால் ஏற்படும் கெடுபலன்கள் குறைய காக்கும் கடவுளான திருமாலை வழிபடுகிறோம். புரட்டாசி மாதம் சங்கடஹர சதுர்த்தியன்று விநாயகரை நினைத்து விரதம் கடைபிடித் தால் சுகபோக வாழ்வு கிடைக் கும். செல்வம், ஆயுள், ஆரோக்கியம் ஆகிய மூன்றும் குறைவின்றி கிடைக்க புரட்டாசி மாதத்தில் விரதத்தை மேற்கொள்கிறோம். புரட்டாசி பௌர்ணமி தினத்தன்று அம்பாளுக்கு 4 வண்ணங்களில் ஆடையும், ரத்தினக்கல் ஆபரணமும் அணிவித்து, நைவேத்தியமாக இளநீர் படைத்து வந்தால், குடும்பத்திற்கு தேவையான செல்வங்கள் வந்து சேரும் என்பது ஐதீகம். கடவுளுக்கு காணிக்கை மற்றும் நேர்த்திக்கடன்கள் செலுத்த புரட்டாசி மாதமே சிறந்த மாதமாக கருதப்படுகிறது. கல்வித்தடை, திருமணத் தடை, நோய், பணப்பிரச்சனை உள்ளவர்கள் புரட்டாசி திருவோணம் நட்சத்திரத்தன்று பெருமாளை வழிபடுவதால் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும். புரட்டாசி மாதத்தில் வரும் சனிக்கிழமை மட்டுமின்றி திங்கட்கிழமையும், புதன்கிழமையும் பெருமாள் வழிபாட்டிற்கு உகந்த நாட்களாகும்.

அன்றைய வழிபாடுகள் மகாலட்சுமியை மகிழ்ச்சி அடைய செய்யும்.






தாம்பரம் மாநகராட்சி 3வது மண்டலம் 43, 44வது வார்டு பகுதி பொதுமக்களை ஒருங்கிணைக்கும் வகையில் ஹரி, கமல் குழுவினர் ஏற்பாட்டில் விநாயகர் சதுர்த்தி முன்னிட்டு மிக சிறப்பாக மேள, தாளங்களோடு, பட்டாசுகள் வெடித்து, இனிப்புகளை வழங்கி மாமன்ற உறுப்பினர்கள் சிட்லபாக்கம் சி.ஜெகன், இரா.ராஜா. அவர்கள் பொதுமக்களுடன் மிகச் சிறப்பாக கொண்டாடினார்கள். உடன் மாநகர அமைப்பாளர் ரா.சிவகுமார், வட்ட நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி நிர்வாகிகள், பொது நல சங்கங்கள் உள்ளிட்ட அனைவரும் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டார்கள்.

மேலும் மாலையில் திருமதி.வைஷ்னவி தலைமையில் குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் பங்கேற்று மேடையில் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் மாமன்ற உறுப்பினர் ஜெகன் சிறப்புரையாற்றினார். விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடுவதால் அக்கம் பக்கம் உள்ள குடியிருபோர் ஒருவருடன் ஒருவர் பழகுவதற்க்கு இது நல்வாய்ப்பாக அமைந்துள்ளது என்று கலந்து கொண்ட பொதுமக்கள் தெரிவித்தனர்.

# CLASSIFIEDS

## RENTAL


WANTED
FLAT RENT
@ CHROMPET
IN AND AROUND CHROMPET
2 BK | CCP | LIFT | POWER BACKUP
CONTACT - 91762 73299


## BUILDING CONTRACT


KR CONSTRUCTIONS
CONSTRUCTION
ARCHITECTURAL PLANS
APPROVALS
RENOVATION
LABOUR CONTRACT
80724 99969



உங்கள் வீட்டை உடனே வாடகைக்கு விட வேண்டுமா?
GST ROAD NEWS-ல்
விளம்பரம் செய்ய 2 x 4cm Rs. 525/- (Colour) மட்டுமே
044 - 22236399 / 89395 26999



FOLLOW
GST ROAD NEWS
ON


## FLAT RESALE


FLAT FOR RESALE
@ TAMBARAM, MUDICHUR
2 BHK | 875 SQFT | UDS 460 SQFT | LIFT | CAR PARKING
CALL - 80722 30451



FLAT FOR RESALE
CHROMPET
NEHRU NAGAR, AYYASWAMY ST
2 BHK | 900 SQFT | UDS 669 SQFT
99413 49369



FLAT FOR RESALE
HASTHINAPURAM
NR, BY BUS STAND
3 BHK | G.F.CUPBOARD WORK
Rs.59L | BANK LOAN 90%
CONT : 99620 03409



FLAT FOR RESALE
CHROMPET
GANAPTHIPURAM
2 BHK
660 SQFT
UDS - 430
GROUND FLOOR
CALL : 80722 30451


## DISCLAIMER


Readers are advised to make appropriate enquiries while responding to advertisement in these columns.GST Road News does not vouch for any claims made by the Advertisers. The Printer, Publisher, Editor and Owner of GST Road News Shall not be held responsible for any consequences, in case such claims are found to be false.



வாங்க வேண்டுமா? விற்க வேண்டுமா?
FLAT & PLOT BUYING/SELLING
JOINT VENTURE INVITED
தங்களது புதிய, பழைய அடுக்குமாடி குடியிருப்புகள், வீடுகள், மனைகள், பண்ணைத்தோட்டங்கள் 1% கமிஷன் அடிப்படையில் நல்ல விலைக்கு விற்பனை செய்தும், வாங்கியும் தரப்படும்.
Saravana Agencies
No 4/7A,Karumariamman koil 1st St., Padmanaban Nagar, Chrompet, Ch - 44
97890 52332


# கோவிந்தா சொன்னால் பெருமாளே வந்துவிடுவார்

வெங்கடாசலபதிக்கு நிவேதனம் செய்யும் பொருட்களில் சர்க்கரைப் பொங்கல் மற்றும் வடை இடம் பெறுவதுண்டு. சிலர் பாயாசமும் படைப்பர். வெண்ணெயும், சர்க்கரையும் கலந்த கலவையான நவநீதமும் படைப்பதுண்டு. அன்புடன் இலையை அர்ப்பணித்தாலும் ஏற்பேன் என்று கீதையில் கண்ணன் கூறியது இங்கே கருதத்தக்கது. பெருமாளுக்குப் படையலிட்டுப் பூஜை செய்யும்போது உறவினர்களையும், நண்பர்களையும் அழைத்து கலந்து கொள்ள செய்ய வேண்டும். எல்லோரும் பக்திப் பெருக்குடன், கோவிந்தா, கோவிந்தா என்று கோஷமிட வேண்டும். பூஜை முடிந்த பிறகு பக்திப் பாடல்களைப் பாடி வணங்கி, வழிபாடு செய்வர். பிறகு வீட்டிற்கு வந்துள்ள விருந்தினர்களுக்கு உணவளித்து, தாம்பூலம் கொடுப்பர். இப்படி அவரவர் இருப்பிடத்திலேயே கோவிந்தா என்ற திருநாமத்தைக் கூறியபடி இருந்தால் திருமாலே அந்த இல்லத்துக்கு எழுந்தருள்வார்.


GST ROAD NEWS
FOR ADVERTISEMENT
DETAILS CONTACT
89395 26999 | 044-22236399


# கண் திருஷ்டி பரிகாரம்



முதலில் வீட்டில் கட்டாயம் துளசி செடியை வளர்க்க வேண்டும். துளசி இருக்கும் இல்லங்களில் எதிர்மறை சக்திகள் தலைதெறிக்க ஓடும் என்பது சாஸ்திரம். வீட்டிற்குள் வரும் ஆபத்துக்களை முதலில் துளசி செடி தான் தன்னை அர்ப்பணித்து கிரகித்துக் கொள்ளும். உங்கள் வீட்டில் நன்கு செழித்து வளர்ந்த துளசி செடி, திடீரென பட்டுப் போய் விட்டால் உங்களுக்கு வர இருந்த ஆபத்தை அது ஏற்றுக் கொண்டது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.






தாம்பரம் மாநகராட்சியின் மண்டலம் 3 ன் தலைவராக மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்ட பிரதீப் சந்திரனை இணைப்பு மையத்தின் நிர்வாகிகள் தலைவர் ஸ்ரீதர், செயலாளர் முருகையன், பொருளாளர் திருமதி. அரசி மற்றும் சங்க நிர்வாகி கண்ணியப்பன் ஆகியோர் சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்தனர் அந்த சமயத்தில் மண்டலம் மூன்றில் நிலவும் குடிநீர் பிரச்சனைகள், நெமிலிச்சேரி பாலசுப்பிரமணியம் தெருவில் விடுபட்டிருக்கும் பாதாள சாக்கடை இணைப்பு திட்டம், மழைநீர் கால்வாய்களை தூர்வாருதல், ராஜேந்திர பிரசாத் சாலையில் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் மற்றும் நகரில் இருக்கும் பல்வேறு அடிப்படை பிரச்சனைகளை பற்றி கோரிக்கைகளை வைத்தனர் சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு நேரில் வந்து ஆய்வு செய்யுமாறு இணைப்பு மையத்தின் சார்பாக அவரைக் கேட்டுக் கொண்டோம்.










# சிட்லபாக்கத்தில் 23 ஆயிரம் விநாயகர் சிலை கண்காட்சி

சிட்லபாக்கம் காந்தி தெருவில் உள்ள ஸ்ரீ லக்ஷ்மி ராம் கணேஷ் மஹாலில் 23,ஆயிரத்திற்கும் மேற்பட்ட விநாயகர் சிலைகளுடன் கண்காட்சி நடந்து வருகிறது செப்டம்பர் 24,வரை நடை பெறுகிறது.

குரோம்பேட்டை ராதாநகர் கிருஷ்ணமாச்சாரி தெருவைச் சேர்ந்த கட்டிட கலை நிபுணர் சீனிவாசன் 20 ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான சிலைகளை சேகரித்து இந்த இலவச கண்காட்சியை நடத்தி வருகிறார்.இந்த ஆண்டு கண்காட்சியை மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் த.சரத்குமார் ரிப்பன் வெட்டி, குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார்.

கண்காட்சி அமைப்பாளர் சீனிவாசன் கூறியதாவது:

விநாயகர் நடந்தால், குளித்தால், படுத்திருந்தால், தாயின் கருவறையில் இருந்தால் எப்படி இருக்கும் என்ற கற்பனையில் சிலைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

டென்னிஸ் விளையாடும் விநாயகர்,அருவியில் குளிக்கும் விநாயகர் 10,அடி உயர அரச மர வேர்களால் உருவான பசுமை விநாயகர் அன்ன வாகனத்தில் பறக்கும் விநாயகர், ஏ.ஐ தொழில் நுட்பத்தில் நிலாவில் இருக்கும் விநாயகர்,தேரில் வரும் விநாயகர்,அந்த தேர் தன்னைத் தானே சுற்றும் அமைப்பு சகல தெய்வங்கள், நவகிரகங்கள்,தட்சணாமூர்த்தி வடிவில் விநாயகர் பல்பு, டியூப் லைட், பூச்செண்டுக்குள் விநாயகர் சபரிமலை ஐயப்பன் கோயில்,மலைக் கோட்டை விநாயகர் கோயில் மினியேச்சர் வடிவங்கள் பொதுமக்கள் கடமைக்காக அல்ல, உன்னிப்பாக கண்காட்சியை பார்க்க வேண்டும். அனைவருக்கும் விநாயகர் தரிசனம் கிடைக்க வேண்டும் என்பதற்காக அனுமதி இலவசம் என்றார்.பொதுமக்கள் காலை 9 முதல் 12 மணி வரை, மாலை 4 முதல் 7 மணி வரை விநாயகர் கண்காட்சி கண்டுகளிக்கலாம்

# திரிஷா பற்றி பரபரப்பாக பேசிய அதிமுக நிர்வாகி

அதிமுக முன்னாள் அமைச்சர் எஸ் பி சண்முக நாதன் கூறும்போது:

முதல்வர் விஜய் பொறுத்தவரை அவர் சந்தோஷமாக இருக்க வேண்டும். சாவு வீட்டுக்கு சென்றாலும், கல்யாண வீட்டுக்கு சென்றாலும், லண்டனுக்கு சென்றாலும் திரிஷாவை கூட்டிக் கொண்டு போகிறார். என்ன உறவின் அடிப்படையில் முதல்வர் அவரை கூட்டி செல்கின்றார்? திரிஷா உடன் பிறவா சகோதரி என்று சொல்லுங்கள், இல்லை முன்னாள் முதல்வர் கருணாநிதி மனைவி, துணைவி என்று கூறியது போல எதையாவது ஒன்றை சொல்லுங்கள்.

எதற்காக தமிழகத்தை கேவலப்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேள்வி விடுத்துள்ளார்.

# குலசைத் திருவிழாவுக்கு நடிகைகளை அழைத்து வர தடை

குலசை தசரா திருவிழா அக்டோபர் 11ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. கோவிலுக்கு வரும் தசரா குழுவினர் நடிகைகளை அழைத்து வரக்கூடாது என்று கோட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

SPECIAL INVITATION
குரோம்பேட்டையில் உள்ள பிரபல நிறுவனத்திற்கு Retd, SENIOR CITIZEN, LADIES, EXSERVICE MAN
AGE - 26 - 75, SSLC AND ABOVE
Work From Home
Unlimited Incentive, Only KYC Docs
73586 21949

WANTED Join Our Team
PHARMACY ASSISTANT
NURSE
RECEPTIONIST
@Chitlapakkam
Be a Part of Our Healthcare Team
7708091019

# தங்கம் விலை அதிரடி உயர்வு

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,040 உயர்ந்து ரூ.1,14,280க்கு விற்பனையாகிறது; ஒரு கிராம் தங்கம் ரூ.130 உயர்ந்து ரூ.14,285க்கு விற்பனையாகிறது

வெள்ளி விலை கிராமுக்கு ரூ.5 உயர்ந்து ரூ.260க்கு விற்பனை செய்யப்படுகிறது

VARUN'S PLACEMENT
WE ARRANGE EXP
COOKS
PATIENT CARETAKER
BABY CARE
- (24 HOUR & PART TIME)
97905 76072 / 89255 24258




# மீல் மேக்கர் பிரியாணி



தேவையான பொருட்கள் : பாசுமதி அரிசி 1 1/4 கப், மீல் மேக்கர் 3/4 கப், வெங்காயம் 1, இஞ்சி பூண்டு பேஸ்ட் 2 டீஸ்பூன், கரம் மசாலா 1 டீஸ்பூன் மிளகாய் தூள் 1/2 டீஸ்பூன், தேங்காய் பால் 1/2 கப், தண்ணீர் 1 1/2 கப், உப்பு தேவையான அளவு அரைப்பதற்கு... தக்காளி 1 (நறுக்கியது) கொத்தமல்லி 1/4 கப், புதினா 1/8 கப், மிளகு 1/2 டீஸ்பூன், சோம்பு 1 டீஸ்பூன், தாளிப்பதற்கு... எண்ணெய் 2 டீஸ்பூன், நெய் 1/2 டேபிள் ஸ்பூன் கிராம்பு 2, ஏலக்காய் 2, பட்டை 1/4 இன்ச், சீரகம் 1/2 டீஸ்பூன், பிரியாணி இலை 1, செய்முறை : * வெங்காயத்தை நீளவாக்கில் வெட்டிக்கொள்ளவும். * பாசுமதி அரிசியை நன்றாக கழுவி வைக்கவும். * ஒரு கப் தண்ணீரில் 1 டேபிள் ஸ்பூன் பால் மற்றும் சிறிது உப்பு சேர்த்து கொதிக்க விட்டு இறக்கி, அதில் மீல் மேக்கரை சேர்த்து 10 நிமிடம் தனியாக ஊற வைக்க வேண்டும். பின்னர் அதனை தனியாக ஒரு பாத்திரத்தில் எடுத்து மூன்று முறை குளிர்ந்த நீரில் கழுவி தனியாக வைத்து கொள்ளவும். * அரைப்பதற்கு கொடுத்துள்ள பொருட்களை மிக்ஸியில் போட்டு அரைத்து தனியாக வைத்துக் கொள்ள வேண்டும். * குக்கரை அடுப்பில் வைத்து, அதில் நெய் மற்றும் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், தாளிப்பதற்கு கொடுத்துள்ள பொருட்களை சேர்த்து தாளித்த பின் இஞ்சி பூண்டு பேஸ்ட், வெங்காயத்தை சேர்த்து பொன்னிறமாக வதக்க வேண்டும். * வெங்காயம் பென்னிறமாக வதங்கியதும் அதில் அரைத்து வைத்துள்ள பேஸ்ட்டை சேர்த்து, பச்சை வாசனை போக வதக்கவும். * அடுத்து அதில் மிளகாய் தூள் மற்றும் கரம் மசாலா சேர்த்து, பச்சை வாசனை போக நன்கு வதக்க வேண்டும். * பின் அதில் மீல் மேக்கர் மற்றும் சிறிது உப்பு சேர்த்து, நன்கு கிளறி விட்டு, அத்துடன் பாசுமதி அரிசியை நீரில் கழுவி சேர்த்து 15 நிமிடம் நன்கு கிளறி விட வேண்டும். * இறுதியில் அதில் தேங்காய் பால், தண்ணீர் சேர்த்து, கொதி வந்ததும் குக்கரை மூடி குறைவான தீயில் 3,4 விசில் விட்டு இறக்கினால், மீல் மேக்கர் பிரியாணி ரெடி!!!

# எண்ணெய் சருமத்தினருக்கு உகந்த ஃபேஷியல்



சருமத்தை ஆழமாக சுத்தபடுத்த ஸ்க்ரப், க்ளென்ஸர், ஆகியவை உபயோகப்படுத்த வேண்டும். சருமத்தில் உள்ள ஈரப்பதத்தை தக்க வைக்க மாய்ஸ்ரைஸர் உபயோகிக்க வேண்டும். ஃபேஷியல் செய்வதால், முகத்தில் ரத்த ஓட்டம் அதிகரித்து, தளர்வடைந்த தசைகளை இறுகச் செய்யும். சுருக்கங்களைப்போக்கும். முகம் இளமையாக இருக்கும். கோல்டு ஃபேஷியலும் சருமத்திற்கு நிறமளிக்கும் வகையில் ஏற்றது. அதைப் போலவே பேர்ல் ஃபேஷியல் எண்ணெய் சருமம் பெற்றவர்களுக்கு ஏற்றது. வறண்ட சருமம் மற்றும் சென்ஸிடிவ் சருமம் உள்ளவர்கள் இதனை செய்வது தவிர்க்கலாம். அல்லது சரும அலர்ஜியை தவிர்க்க பேட்ச் டெஸ்ட் செய்த பின் உபயோகிக்கலாம். இது அதிகப்படியான எண்ணெயை உறிஞ்சி, சருமத்தை முகப்பருக்களிலிருந்து பாதுகாக்கும். சுருக்கங்களை வர விடாமல் தடுக்கும். வெயிலினால் உண்டாகும் கருமையால் முகம் ஒரு நிறத்தையும், உடல் ஒரு நிறத்தையும் காண்பிக்கும். அப்படி இருப்பவர்கள் மாதம் ஒரு முறை பேர்ல் ஃபேஷியல் செய்யும்போது, கருமைக்கு குட்பை சீக்கிரம் சொல்லிவிடலாம். கரும்புள்ளி, மரு ஆகியவை நீங்கி, பளிச்சென்ற தோற்றத்தைப் பெறலாம். பேர்ல் ஃபேஷியல் செய்து கொண்டால், முகத்தில் உருவாகும் சுருக்கங்கள் விரைவில் மறைந்துவிடும். முகத்தோற்றம் பொலிவாக காண்பிக்கும். சருமம் ஜொலிக்கும். எண்ணெய் சருமம் இருப்பவர்களுக்கு அழுக்குகள் இறந்த செல்கள் ஆகியவை சருமத் துளைகளிலேயே அடைப்பட்டு சருமத்தை கடினமாக்கி, பிரச்சனைகளைத் தரும். அவர்களுக்கு ஏற்ற ஃபேஷியல் இது. ஏனெனில் இவை சருமத்தில் துளைகளிலிருக்கும் அழுக்களை நீக்கி சுத்தப்படுத்தும். துவாரங்களை சுருங்கச் செய்து, முகத்தை இளமையாக வைத்திருக்கும்.

# கண்கள் துடிக்கும் பிரச்சனை



உண்மையில் கண்கள் துடிப்பது, உடலில் இருக்கும் ஒருசில பிரச்சனைகளுக்கான அறிகுறியாகும். • நீங்கள் அதிகப்படியான மன அழுத்தத்திற்கு உள்ளாகியிருந்தால், கண்கள் அடிக்கடி துடிக்க ஆரம்பிக்கும். எனவே மன அழுத்தம் இருந்தால், அதனைக் குறைக்கும் செயல்களில் ஈடுபடுங்கள். • தூக்கமின்மை மற்றும் நாள் முழுவதும் கம்ப்யூட்டர் முன்பு உட்கார்ந்து கண்கள் சோர்ந்திருந்தால், கண்கள் அதிகம் துடிக்கும். எனவே நல்ல நிம்மதியான தூக்கத்தை மேற்கொண்டு, கம்ப்யூட்டர் முன்பு அதிக நேரம் வேலை செய்வதைக் குறைத்திடுங்கள். • கண்களுக்கு போதிய ஓய்வைத் தராமல் எப்போதும் கம்ப்யூட்டர் முன்போ, மொபைலை அதிகம் பயன்படுத்திவந்தாலோ, கண்கள் அதிக அளவில் களைப்படையும். எனவே கம்ப்யூட்டர் முன்பு அதிக நேரம் வேலை செய்வது போல் இருந்தால், கண்களுக்கு ஸ்பெஷலான கண்ணாடியை அணிந்து கொள்ளுங்கள். இதனால் கணினி திரையின் ஒளியால் கண்கள் விரைவில் களைப்படையாமல் இருக்கும். • ஆல்கஹால் அளவுக்கு அதிகமாக எடுத்து வந்தால், அப்போது கண்கள் அடிக்கடி துடிக்க ஆரம்பிக்கும். எனவே நீங்கள் இப்படிப்பட்டவராக இருந்தால், காபி, டீ, சோடா, ஆல்கஹால் போன்றவற்றை குறைத்துக் கொள்வது நல்லது. • தினமும் போதிய அளவில் தண்ணீர் குடிக்காமல் இருந்தால், கண்கள் வறட்சி அடையும். உங்கள் கண்கள் வறட்சியுடன் இருந்தால், அது கண்கள் துடிப்பதன் மூலம் வெளிப்படும். • கண்களில் அலர்ஜி இருந்தால், அரிப்பு, வீக்கம் மற்றும் கண்களில் தண்ணீர் வடிதல் போன்றவை ஏற்படும். அதுமட்டுமல்லாமல் கண்கள் அடிக்கடி துடிக்கவும் செய்யும்.

## தாராபுரம் களத்தில் இறக்கப்பட்ட 'கரூர்ப் படை'!

"தாராபுரம் சட்டமன்றத் தேர்தலில் அதிமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று சில நாட்களில் தவெகவுக்குத் தாவிய வேட்பாளர் மீதுள்ள மக்களின் அதிருப்தி.. மற்றும் தவெக அரசு மீது மக்களின் உற்சாகமற்ற மனநிலை... தாராபுரம் தொகுதித் தேர்தலில் மு.க.ஸ்டாலின் செலுத்தும் நேரடிக் கவனம்... ஆகிய வற்றைக் கருத்தில் கொண்டு தாராபுரம் களத்தில் இறங்கி விளையாடத் தொடங்கி யிருக்கிறது திமுக.

செந்தில் பாலாஜி தலைமையில் திமுகவினர் தாராபுரத்தில் தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்!

## அரசு ஊழியர்களை கூண்டோடு மாற்ற அரசு முடிவு

நிர்வாக அலுவலர், இள நிலை நிர்வாக அலுவலர், அலுவலகக் கண்காணிப்பாளர், உதவியாளர் பணியிடங்களில் உள்ளவர்கள் தொடர்ந்து ஒரே இடத்தில் 5 முதல் 10 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றினால் அதன் விவரங்களை 23ம் தேதிக்குள் சமர்பிக்க வேண்டும் என அரசு அறிவித்துள்ளது.

## 3வதுமண்டல தலைவராக ஜெய பிரதீப் சந்திரன் மீண்டும் பதவி ஏற்பு



கடந்த தாம்பரம் மாநகராட்சி தேர்தலில் திமுக கட்சியில் கவுன்சிலர் சீட் வழங்காததால் 40 வது வார்டில் சுயேட்சையாக போட்டியிட்டு வெற்றி பெற்றார் ஜெயபிரதிப் சந்திரன், மேலும் அவரின் தாயார் கிரிஜா சந்திரன் 39 வது வார்டில் வெற்றிப்பெற்றார்.தொடர்ந்து பிரதீப் சந்திரன் 3 வது மண்டல சேர்மனாக தேர்வு செய்யப்பட்டார்.இந்த நிலையில் அவரை சில காரணங்களை கூறி நகராட்சி நிர்வாக சட்டப்படி நகராட்சி நிர்வாக துறை மூலமாக கவுன்சிலர் பதவி பறிக்கப்பட்டது.இந்த நிலையில் ஜெயபிரதிப் சந்திரன் நீதிமன்றத்தை நாடி தன் தரப்பு விளக்கத்தை அளித்து தன் கவுன்சிலர் பதவி பறித்தது முறையற்றது என வழக்கு தொடர்ந்தார்.அந்த வழக்கில் ஜெயபிரதீப் சந்திரன் மீண்டும் அதே பதவியில் தொடரலாம் என நீதிமன்றம் உத்திரவிட்டது.இந்த நிலையில் த.வெ.க கட்சியில் ஜெயபிரதிப் சந்திரன் சேர்ந்தார், மீண்டும் நீதிமன்றத்தில் தனக்கு பொறுப்பேற்க அனுமதிக்க வேண்டும் என உத்தரவு பெற்ற நிலையில் தாம்பரம் மாநகராட்சி 3 மண்டல குழு அலுவலகத்தில் அதே சேர்மன் பதவிகான பொறுப்புகளை ஏற்றார்.அவரை அவரின் தாயார் கிரிஜா சந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் சிட்லப்பாக்கம் ஜெகன், சாந்தி புருஷோதமன், கிருஷ்ணமூர்த்தி.சந்திரன், மாநகராட்சி அதிகாரிகள், ஊழியர்கள், நலசங்கத்தினர் என பல்வேறு தரப்பினர் ஜெயபிரதிப் சந்திரனை நேரில் வாழ்த்துகளை தெரிவித்து சென்றனர்.

## விசில் சின்னத்தில் எம்ஜிஆர் ஆத்மா

மதுராந்தகத்தில் நடந்த தேர்தல் பிரச்சார கூட்டத்தில் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பேசும்போது இரட்டை இலை முடிந்து விட்டது. எம்ஜிஆர் ஜெயலலிதா ஆத்மா விசில் சின்னத்தில் உள்ளது என்று கூறினார். இப்போது இருப்பது எடப்பாடி அதிமுக என்று அவர் விமர்சித்தார்.

## அதிகரிக்கும் டெங்கு

தமிழ்நாட்டில் நாளுக்கு நாள் டெங்கு பாதிப்பு அதிகமாகி வரும் நிலையில், நேற்று ஒரே நாளில் 253 பேருக்கு டெங்கு காய்ச்சல் உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஜனவரி 1 முதல் செப்டம்பர் 18 வரை 2.10 லட்சம் பேரிடம் டெங்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில் 16,830 பேருக்கு டெங்கு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

## மீண்டும் வெளிநாடு செல்கிறார் விஜய்;

அடுத்த ஆண்டு ஜனவரியில் சுவிட்சர்லாந்து நாட்டில் நடைபெறும் உலகப் பொருளாதார மாநாட்டில் விஜய் பங்கேற்கிறார்!

## சரத்குமார் அரசியலில் இல்லையா

நடிகரும் பாரதிய ஜனதா கட்சி பிரமுகரமான சரத் குமார் இன்று நாகர்கோவிலில் நடந்த சினிமா படப்பிடிப்பில் கலந்து கொண்டார்.

அப்போது விஜய லண்டன் பயணம் பற்றி கேட்டனர். அதற்கு அவர் நான் அரசிய லில் இல்லை, படப்பிடிப்பில் இருக்கிறேன் என்று கூறினார்.









## சிட்லபாக்கத்தில் 23 ஆயிரம் விநாயகர் கண்காட்சி



சிட்லபாக்கத்தில் **ஸ்ரீ லட்சுமி ராம் கணேஷ் மஹாலில் நடைபெற்ற 23 ஆயிரம் விநாயகர் கண்காட்சி**யை மனித வள மேம்பாட்டு துறை அமைச்சர் **மாண்புமிகு திரு.டி.சரத்குமார்** துவக்கி வைத்த போது எடுத்த படம். அருகில் விநாயகா குழும தலைவர் **திரு.சீனிவாசன், துணைவியார்** மற்றும் **மகன்** உள்ளனர்.



விநாயகர் கண்காட்சியை தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் **மாண்புமிகு திரு.எல்.முருகன்** பார்வையிட்டார். அருகில் விநாயகா குழும தலைவர் **திரு.சீனிவாசன்.**



விநாயகர் கண்காட்சியை தாம்பரம் மாநகராட்சி மேயர் **திருமதி.வசந்தகுமாரி கமலக்கண்ணன்,** துணைமேயர் **திரு. கோ.காமராஜ்** கண்டு ரசித்தனர். அருகில் விநாயகா குழும தலைவர் **திரு.சீனிவாசன்.**



கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள **வெள்ளிமலை ஸ்ரீ விவேகானந்தா ஆசிரமத்தின் தலைவர் சுவாமி சைதன்யானந்தஜி மகராஜ்** அவர்கள் கண்காட்சியை பார்வையிட்டார். அருகில் விநாயகா குழும தலைவர் **திரு சீனிவாசன்.**